Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 21 ஜனவரி 2016 கானம் : 6





மதுரபுரி ஆச்ரமத்தில் தெப்போத்ஸவம் டிசம்பர் 26



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilaki Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

## மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 ஜனவரி 2016 கானம் : 6

Delivered by India Post www.indiapost.gov.in

உடுமலைப்
பேட்டை
நவம்பர் 29, 2015



மஹா மந்திர
கூட்டு ப்ரார்த்தனை
G.V.G.
கலை அரங்கம்











டிசம்பர் 20 - சென்னை வீனஸ் காலனி
வைதிகஸ்ரீ மாத பத்திரிக்கையின் ஆண்டுவிழா



சிவகாசியில் நகரசங்கீர்த்தனம் நவம்பர் 27




பெரியகுளம் நவம்பர் 28 - மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை



டல்லஸ் நகரில் சத்சங்கம் - ராமானுஜம்ஜி



"க்ருஷ்ணானுபவம்" - கலிபோர்னியா



சியாட்டிலில் சத்சங்கம்



Harmony In Communication workshop - Ramanujamji at Lawrence Berkeley Labs, California, USA





நவம்பர் 13-15 - ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி
சிட்னியில் மதுர உத்ஸவம் - பாக்யநாதன்ஜி



டிசம்பர் - ஆக்லாந்து -நியூசிலாந்தில்
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



பிஜி நாட்டு சிறையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை
(சிறை அதிகாரிகளுடன் பாக்யநாதன்ஜி)









ஸ்ரீசாந்தீபனி குருகுலம் – மதுரபுரி ஆஸ்ரமம், ஹைதராபாத் மற்றும் ஸ்ரீரங்கம்
வித்யார்த்திகள் மற்றும் அத்யாபகர்கள் குருநாதருடன் – நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில்

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 ஜனவரி 2016 கானம்: 6

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

## இந்த இதழில் ...


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-238 | 05 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 |
| எது லட்சியம்? | 08 |
| மார்கழி நகரகீர்த்தனம் | 11 |
| ஸ்ரீகோபாலகிருஷ்ண பாகவதர் | 15 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| மாலே மணிவண்ணா | 36 |


சொல்லுந்தனையும் தொழுமின் விழுமுடம்பு
செல்லுந்தனையும் திருமாலை - நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தாலேத்துதிரேல் நன்று - **பொய்கையாழ்வார்**

**-முதல் திருவந்தாதி அறுபத்தி ஒன்பதாம் பாசுரம்**

திருமாலின் அவதார கதைகளை, பிறருக்கு சொல்வதற்கு சக்தி இருக்கும்போதெல்லாம், அப்படி எடுத்து சொல்லி திருமாலை வணங்குங்கள். நிலையில்லாத இந்த உடல் இருக்கின்ற வரையிலும், அழகிய பூக்களை கொண்ட மாலைகளை சமர்ப்பித்தாவது, வேள்வியினாலாவது அல்லது கிரியைகளாலாவது அல்லது வேதமந்திரத்தாலாவது அல்லது திருநாம சங்கீர்த்தனத்தாலாவது வழிபடுவது நன்மை தரும்.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: மாண்டு                                    தாளம்: ஆதி

க்ருஷ்ண க்ருபாளோ     க்ருஷ்ண க்ருபாளோ
வ்ருஷ்ணி குலபதே     க்ருஷ்ண க்ருபாளோ
(க்ருஷ்ண க்ருபாளோ)

சங்கசக்ரதர     க்ருஷ்ண க்ருபாளோ
சங்கசூடதர     க்ருஷ்ண க்ருபாளோ
(க்ருஷ்ண க்ருபாளோ)

மதுராவதார     க்ருஷ்ண க்ருபாளோ
மதுரமுரளீதர     க்ருஷ்ண க்ருபாளோ
(க்ருஷ்ண க்ருபாளோ)

ப்ருந்தாவனபதே     க்ருஷ்ண க்ருபாளோ
ப்ருந்தாசேவித     க்ருஷ்ண க்ருபாளோ
(க்ருஷ்ண க்ருபாளோ)

ஸர்வாங்க சுந்தர     க்ருஷ்ண க்ருபாளோ
ஸர்வ ஸரண்ய     க்ருஷ்ண க்ருபாளோ
(க்ருஷ்ண க்ருபாளோ)

முன் அட்டை : மதுரபுரி ஆஸ்ரமத்தில்

பின் அட்டை - மதுரபுரி ஆஸ்ரமத்தில் தெப்போத்ஸவம் 26.12.2015



# மதுரமான மஹநீயர் – 238

-குருநாராயணன், தஞ்சை

சமீபத்தில் தமிழ்நாட்டையே உலுக்கி எடுத்துவிட்டது மழை. அதுவும் சென்னையில் 1918ஆம் ஆண்டிற்கு பிறகு அதாவது சற்றேறக்குறைய நூறு வருடங்களுக்கு பின், அப்படி ஒரு மழை பெய்தது. டிசம்பர் 1 மற்றும் 2 தேதிகளில், ஒரே நாளில் சென்னையில் மட்டும் 50செ.மீ. மழை பெய்தது. எல்லா இடத்திலும் நீர் தேங்க ஆரம்பித்தது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகள் நிரம்ப ஆரம்பித்தன. இருந்தபோதிலும், அணைக்கு நீர்வரத்து வருவது குறையவே இல்லை. அணை உடைத்துக்கொண்டு விடுமோ என்ற அச்சத்தில், அணையை திறந்துவிட்டார்கள். அணை நீர், நதிபோல் சென்னை நகர் எங்கும் ஓட ஆரம்பித்தது.

அணை நீர், எல்லா பகுதிகளிலும் அதிகமாக ஓடவும் தேங்கவும் ஆரம்பித்ததால், எல்லா இடங்களுக்கும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அதனால் தொலைபேசி, கைபேசிகளும் இயங்கவில்லை. சென்னையில் இருப்பவர்கள் தவித்த தவிப்பை சொல்ல முடியாது. கைக்குழந்தை வைத்து கொண்டிருந்தவர்கள், அவசரமாக மருத்துவ உதவி தேவைப்பட்டவர்கள், நடக்க முடியாதவர்கள்... அப்பப்பா! அவர்கள் பட்ட பாட்டை சொல்ல முடியாது!!

மின்சார ரயில்கள் இயங்கவில்லை. வெளியூர் செல்லும் பேருந்துகள் நிறுத்தப்பட்டன. மக்கள் பரிதவித்தார்கள். சென்னையில் உறவினர்கள் உள்ளவர்களும், அவர்களின் நிலைமையை நினைத்து எந்தவிதத்திலும் தொடர்பு கொள்ள முடியாதபடி தவித்துக்கொண்டு இருந்தார்கள்.




என் பெரிய மகள் சென்னை சாலிக்ராமத்தில் வசித்து வருகின்றாள். அவர்கள் வீட்டிற்குள் மழைநீர் புகுந்து ஒரு வாரம் அல்லல்பட நேர்ந்தது. எந்தவிதத்திலும் தொடர்பு கொள்ள முடியவில்லை. என் மனம் மிகவும் கவலையுற்று அல்லல்பட ஆரம்பித்தது.

என்ன செய்வதென்று தெரியாமல், இரவு எட்டு மணிக்கு அமர்ந்து, குருஜியை பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். இரவு ஒரு மணி வரை குருஜியை பிரார்த்தனை செய்து கொண்டே, நாமா சொல்லி வந்தேன்.

திடீரென்று நேரில் பார்ப்பது போல், குருஜி என் முன்பாக தோன்றினார். தோன்றியதோடு மட்டுமல்லாமல், "கவலைப்படாதே! உன் பெண் சௌக்கியமாக இருக்கின்றாள்" என்று தெளிவாக கூறினார். மனதில் சற்று நிதானமும் தைரியமும் வந்தது.

அடுத்தநாள் மதியம் இரண்டு மணி அளவில், என் மகளிடமிருந்து போன் வந்தது. தான் குடும்பத்தோடு சௌக்கியமாக இருப்பதாக செல்போன் மூலம் தெரிவித்தாள்.

என் உள்ளம் புகுந்து, என்னை தைரியப்படுத்திய குருஜியின் அருளை நினைத்து உருகினேன். அடுத்த முறை தஞ்சையில் நடந்த சத்சங்கத்திலும், அன்பர்களிடையே, இந்த நிகழ்ச்சியை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டேன்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஸ்ரீமத் பாகவதத்தில் ஹிரண்யகசிபுவை நாஸ்திகன் என்று எப்படி சொல்ல முடியும்? ஏன் என்றால், அவனே பிரம்மாவை நோக்கி தவம் செய்துதானே, வரம் வாங்கினான்?

பதில்: உண்மைதான்; தனக்கு விஷத்தால், மனிதனால், மிருகத்தால், உள்ளே, வெளியே, காலையில், இரவில், பகலில், பிரம்மா படைத்த எந்த ஒன்றாலும் மரணம் வரக்கூடாது என்று வரம் வாங்கிவிட்டதால், தனக்கு மரணமே வராது என்று நினைக்கின்றான். அதாவது பகவானுக்கு **LIMITATIONS** உண்டு என்று நினைக்கிறான். பகவானுக்கு **LIMITATIONS** உண்டு என்று நினைக்கிறவன் ஆஸ்திகனான நாஸ்திகன்.

கேள்வி: இந்த விஷயம் விபரீதத்தில்தான் முடியும் என்று தெரிந்து ஏமாந்தேனே?

பதில்: நாம் ஏமாறுகின்ற ஒவ்வொரு தருணத்திலும், முதலில் நம் மனதிடம் ஏமாறுகின்றோம். பிறகு அடுத்தவரிடம் ஏமாற தயார் ஆகின்றோம். அதுதான் உண்மை.

பகவந் நாமமே உணவு; பகவந் நாமமே நீர்; பகவந் நாமமே ஔஷதம்; பகவந் நாமமே உயிர்; பகவந் நாமமே சொத்து; பகவந் நாமமே உறவு; பகவந் நாமமே தோழன்; பகவந் நாமமே குரு; பகவந் நாமமே தெய்வம்; பகவந் நாமமே ஸர்வமும்; நாமத்தை சொல்லி தினமும் எழுவோம்; நாமத்தையே எப்பொழுதும் தொழுவோம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# எது லட்சியம்?

–நல்ல ஹரி

வாழ்க்கையில் மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும், ஒரு லட்சியம் வேண்டும். லட்சியம் இல்லாத வாழ்க்கையாக மனிதனுடைய வாழ்க்கை அமையுமானால், அது மற்ற மிருகங்களின் வாழ்க்கைபோல் அமைந்துவிடும். பிறந்தான்; உணவு உட்கொண்டான்; உறங்கினான்; குழந்தைகளை பெற்றெடுத்தான்; இறந்தான் என்று முடிந்துவிடும். கால்நடைகள் கூட, இவைகள் எல்லாவற்றையும் செய்கின்றன. லட்சியம் வேண்டும். எதை லட்சியமாக வாழ்க்கையில் கொள்வது? சிலருக்கு, பணக்காரனாக ஆக வேண்டும் என்பது லட்சியம். சிலருக்கு, உயர்ந்த பதவிக்கு வர வேண்டும் என்று லட்சியம். சிலருக்கு, புகழை அடைய வேண்டும் என்று லட்சியம். இப்படியாக, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று லட்சியம்.

ஆனால், இவைகளை அடைவதற்கும், மனிதன் படாத பாடு, பட வேண்டியுள்ளது. அதற்காக சில சமயங்களில், பாவம் கூட செய்ய வேண்டியுள்ளது. அடைந்த பிறகு, இதை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற கவலை; அப்பொழுதும், இவைகள் கை நழுவி போய்விடுமே என்ற கவலை. ஒருக்கால் கை நழுவி போய்விட்டால், ஏற்படும் அவமானம், துயரம் தாங்க முடியாதது. வாழ்த்திய உலகம் தூற்றும். சுற்றி வந்தவர்கள் விலகுவார்கள். செல்வாக்கு குறையும். இப்படியாக சொல்லிக்கொண்டே போகலாம். இவைகள் நம்மை விட்டு போகாவிட்டால் கூட, நாம் ஒருநாள் அவைகளை விட்டு போய்த்தானே ஆக வேண்டும்!

மனிதன், செவ்வாய்க்கு சென்று விட்டான். செவ்வாயில் நீர் இருக்கலாம். புதிய **Galaxy** கண்டுபிடித்து விட்டான் போன்ற செய்திகள், இறக்கும் தறுவாயில் உள்ள ஒருவருக்கு என்ன விதத்தில், பலன் அளிக்க போகின்றது? மரணம் என்று ஒன்று உள்ளதை மறக்கக் கூடாது. அப்பொழுது, எதை லட்சியமாக

கொள்ளலாம்? இறைவனை அடைவதை லக்ஷியமாக கொள்ளலாம்.

இறைவனை அடைவதற்காக, நாம் செய்யும் தியானமோ, நாமஜபமோ, யோகமோ, ஆத்ம விசாரமோ வீணாக போக போவதே இல்லை. நாம் இறைவனை இந்த பிறவியில் அடையவில்லை என்றால் மட்டும் என்ன? ஏதோ ஒரு பிறவியில் அடைந்துதானே ஆக வேண்டும்? அந்த பிறவியில், சாதனை செய்துதானே ஆக வேண்டும்? **Better Late than never.** நோய்க்காக மருத்துவமனையில் சேர்ப்பதுதான் நம் கையில் இருக்கிறது. பிறகு மருத்துவராக பார்த்துத்தான் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அதுபோல், நாம் முக்தி நிலையை அடைகின்ற வரையில், பிறந்து பிறந்து, இறக்கத்தான் வேண்டும். மேலும் இந்த மனித பிறவியை பகவான் கொடுத்ததே, நாம் பல பிறவிகளில் செய்த பாவத்தை போக்கி கொள்வதற்காகத்தான்; இது பகவான் கொடுத்த ஒரு வரப்ரசாதம்.

புண்ய நதிகளில் நீராடலாம். தெய்வங்களை பூஜை செய்யலாம். தானம் செய்யலாம். தவம் செய்யலாம். கதை கேட்கலாம். நாமகீர்த்தனம் செய்யலாம். இவைகளை நாம் செய்யாததோடு மட்டுமல்லாமல், மேலும் பாவங்களை செய்தோமானால், இறைவன் என்ன செய்வான்? பரம கருணையினால், புண்ய பாவங்களின் பலனை மட்டும், அனுபவிக்கக் கூடிய அதே சமயத்தில், பாவங்கள் எதுவும் செய்ய முடியாத, ஐந்தறிவிலிருந்து ஓரறிவு வரை உள்ள ஜீவனாக பிறக்கச் செய்து விடுவார். ஏனென்றால், அப்பொழுதான் கர்மா புதியதாக ஒட்டாமல், செய்த கர்மா மட்டும் கழியும்.

இறைவனை அடைவதற்காக, செய்யும் எந்த ஒரு வழியும் சுககரமானதே. அதிலும், பாகவத தர்மம் ரம்யமானது. கதை கேட்டல், பாராயணம், பூஜை, கீர்த்தனம், உற்சவம் எல்லாமே ஆனந்தமானது. இவைகளை, முறைப்படி நெறி தவறாமல் தொடர்ந்து விடாமல், செய்து வந்தோமானால், இப்பொழுதே, இங்கேயே ஆனந்தத்தை உணரலாம். இதற்கு யோகானந்தம் என்று பெயர்.

கடவுளை அடைய முடியாமல், அதாவது நாம் செய்த சாதனைகள் பூர்த்தி ஆகாமல், மனித பிறவி முடிந்து விட்டால் தவறு இல்லை. எந்த அளவிற்கு செய்துள்ளோமோ, அந்த அளவிற்கு வாசனைகள் குறையும். வாசனைகள் குறைகின்ற அளவிற்கு, பிறவிகள் குறையும். நல்லதுதானே? இந்த பிறவியிலேயே நம் சாதனைகள் முடிந்து இறைவனை அடைந்து விட்டால், ஆனந்தம்தான். இதை விட, வேறு ஆனந்தம் என்ன உள்ளது? பிறவிப்பயனை பெற்றவர்களாக ஆகி விடுவோம். ஆகவே, எல்லா விதத்திலும் இறைவனை அடைவதையே, லட்சியமாக கொள்வோம்.

இறைவனை அடையக்கூடிய பல வழிகளில், எளிமையான வழியான பாகவத தர்மத்தை கைக்கொள்வோம். குழம்பாமல், தெளிவாக இருப்போம். அவ்வப்பொழுது சோர்வடைந்தாலும், பகவானை சார்ந்து, அந்த சோர்வை போக்கி கொள்வோம். எத்துனை முறை கீழே விழுந்தாலும், மேலும் புதிய சக்தியுடன், உற்சாகத்துடன் எழுவோம். சும்மா அமர்ந்தால், மனது தனக்கு தானே சுற்ற ஆரம்பித்து விடும். மனதை நாமாவிலே சுற்ற விடுவோம். சோம்பேறித்தனத்தை உதறி தள்ளுவோம். கொஞ்சம் கொஞ்சமாக ஆசைகளை, பாசங்களை விலக்குவோம். நம்மை புகழும் ஆசையில் இருந்து விலகி, கண்ணனை புகழுவோம். முடிந்த வரையில் விவேகத்துடன், practicalஆக நடந்து கொள்வோம்.

நாம், 'சாதாரண புழு போல், பிறந்து வாழ்ந்து இறக்க மாட்டேன்; அவன் அருளால் இறைவனை அடைந்தே தீருவேன்' என்று சபதம் செய்து கொள்வோம். என்றுமே கண்ணனின் கருணையை நம்பி இருப்போம். உலகத்தில் மனிதர்கள் கேட்கக்கூடிய எவ்வளவோ உலக விஷயமான பிரார்த்தனைகளையே நிறைவேற்றக் கூடிய பகவான், நாம் பிரார்த்திக்கக் கூடிய, இந்த ஒன்றையா அருளாமல் இருப்பான்? ஏனென்றால், அவன் படைத்ததே அவனை அடைவதற்கு அன்றோ?

எப்பொழுதும் ஹரி நாமம் சொல்லிக்கொண்டே இருந்தால், நாம் கீழே விழ மாட்டோம். இது நிச்சயம்.

# மார்கழி நகரகீர்த்தனம்

- ஸ்ரீ பாலாஜி ராமச்சந்திரன்

பகவான் கண்ணன் கீதையில், தான் மாதங்களில் மார்கழியாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். அப்பேர்ப்பட்ட சிறப்பு வாய்ந்த மாதம் தேவர்களாலும் போற்றப்படுவதாகும். இந்த மாதத்தில்தானே, பாவை நோன்பு எனும் அரிய நோன்பு நோற்று, தன் தோழியர்களோடு விடியற்காலையில் நகர சங்கீர்த்தனம் செய்யும்போது, தன் பாசுரத்தில், 'உத்தமன் தன் பேர் பாடி' என்றும், 'வாயினால் பாடி மனதினால் சிந்திக்க' என்றும், நாம சங்கீர்த்தனத்தின் மேன்மையை நாம் அனைவரும் உணரும்படி செய்து, அந்த பகவானையே ஆண்டு கொண்டாள் அந்த ஸ்ரீ ஆண்டாள்!

தேவரும் போற்றும் இந்த மாதத்தில், நாமும் மாதம் முழுவதும், 'மஹாமந்திர நாம சங்கீர்த்தனம்' செய்து, இறையருளுக்கும் குருவருளுக்கும் பாத்திரமாகி, பல நன்மைகள் பெறுவோமாக! கீழ்க்கண்ட நாமத்வார் மற்றும் G.O.D சத்சங்கங்களில், மார்கழியில் வெகு விமரிசையாக அன்பர்கள் மஹாமந்திர நகரகீர்த்தனம் செய்து வருகின்றனர். அருகில் உள்ள வரிசையில், கலந்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை, இலக்கங்களில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

| இடம் | நபர் | இடம் | நபர் |
|---|---|---|---|
| தூத்துக்குடி | 100 | ஸ்ரீபெரும்புதூர் | 50 |
| தருமபுரி | 10 | சேலம் | 20 |
| பெங்களூரு | 20 | அம்பை | 40 |
| வத்தலகுண்டு | 25 | மங்களூர் | 40 |
| அம்மையப்பன் | 50 | குடியாத்தம் | 80 |
| குரோம்பேட்டை | 15 | கோவில்பட்டி | 20 |
| காரைக்குடி | 80 | அருப்புக்கோட்டை | 25 |
| கோவூர் | 90 | திருத்துறைப்பூண்டி | 10 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 10 | திருத்தணி | 40 |
| திருச்சி | 20 | சிங்கப்பெருமாள்கோவில் | 20 |

(அடுத்த பக்கம் பார்க்க)

| இடம் | நபர் | இடம் | நபர் |
|---|---|---|---|
| கூடுவாஞ்சேரி | 25 | உடுமலை | 15 |
| மயிலாப்பூர் | 60 | பாலக்காடு | 10 |
| வாலாஜா | 20 | உசிலம்பட்டி | 15 |
| அண்ணாநகர் | 20 | மாதவரம் | 35 |
| கொடுங்கையூர் 3 இடங்களில் | 82 | லவண சமுத்திரம் | 15 |
| கடலூர் | 20 | பெரும்பாக்கம் | 25 |
| பரமக்குடி | 63 | ஆற்காடு | 30 |
| தஞ்சாவூர் | 10 | அயனாவரம் | 20 |
| கண்ணதாசன் நகர் | 25 | மாதம்பாக்கம் | 20 |
| சிவகாசி | 50 | பட்டினப்பாக்கம் | 50 |
| விருதுநகர் | 80 | சிவகாசி கோபகுடீர குழந்தைகள் | 20 |
| காரியாபட்டி | 70 | தாயில்பட்டி | 25 |
| மதுரை | 15 | சோளிங்கர் | 20 |
| பெரியகுளம் | 50 | திருவள்ளூர் | 20 |
| ஆம்பூர் | 70 | களத்துபேட் | 10 |
| சேலம் | 10 | வள்ளியூர் | 30 |
| அம்பத்தூர் | 30 | அணைக்கட்டு | 4 |
| வெள்ளகோவில் | 30 | பாண்டிச்சேரி | 15 |
| சின்ன அணைக்கட்டு | 20 | தாராபுரம் | 10 |
| சின்ன கங்காநல்லூர் | 30 | திருமலையப்பாபுரம் | 45 |
| ஆழ்வார்குறிச்சி | 15 | முக்கூடல் | 45 |
| பாப்பாகுடி | 15 | | |

## சனாதனப்புதிர் பகுதி 81

**- விடைகள் -ஆத்ரேயன்**

1. கலிங்க நாட்டின் அதிபதி; காஸ்யப கோத்ரம்; பிரபவ வருடம்; சுத்த சப்தமி; விசாகா நக்ஷத்ரம்; சிம்ம ராசி; ஞாயிறு, கோதுமை - சிவப்பு நிறம். (மாக சுக்ல சப்தமி, கிருத்திகா நக்ஷத்ரம் என்றும் சொல்லப்படுகிறது).

2. யாமுன தேசம், ஆத்ரேய கோத்ரம்; நந்தன வருடம்; கார்த்திகை சுத்த சதுர்த்தசி; கார்த்திகை நக்ஷத்திரம், கடக ராசி, திங்கட்கிழமை, அரிசி, வெண்ணிறம். (சௌம்ய வருஷம், கார்த்திகை மாதம், சுக்ல பக்ஷம் தசமி, உத்ராபாத்ரா நக்ஷத்திரம் என்றும் சொல்லப்படுகிறது).

3. அவந்தி தேசம், பாரத்வாஜ கோத்ரம், க்ஷய வருடம், பாத்ரபத சுக்லபக்ஷ த்விதீயை, பூர நக்ஷத்திரம், மேஷ விருச்சிக ராசி, செவ்வாய்க்கிழமை, துவரை, சிவப்பு நிறம். (ராக்ஷஸ வருஷம், ஆஷாட க்ருஷ்ண சதுர்த்தி, மிருகசீர்ஷம் என்றும் சொல்லப்படுகிறது).



4. மகத தேசம், ஆத்ரேய கோத்ரம், சௌம்ய வருஷம், வைசாக விசாக சுக்லபக்ஷ ஏகாதசி, உத்திர நக்ஷத்திரம், கன்னி/மிதுனம், புதன்கிழமை, பயர், மஞ்சள் நிறம். (ஆங்கிரஸ வருஷம், மார்கழி, சுக்லபக்ஷ சப்தமி, பூர்வாபாத்ரா நக்ஷத்ரம் என்றும் சொல்லப்படுகிறது).

5. சிந்து த்வீபம், ஆங்கிரஸ கோத்ரம், சௌம்ய வருஷம், துவாதசி, அவிட்ட நக்ஷத்திரம், தனுசு/மீனம் ராசிகள், வியாழக்கிழமை, கொத்துக்கடலை, தங்க நிறம். (தர்தர வருஷம், வைகாசி கிருஷ்ண சதுர்தசி பரணி நக்ஷத்ரம் என்றும் சொல்லப்படுகிறது).

6. காம்போஜம், பார்கவ கோத்ரம், மன்மத வருடம், தசமி, பூசம், துலாம்/விருஷப ராசி, வெள்ளிக்கிழமை, மொச்சை, வெண்ணிறம்.


(பார்த்திவ வருடம், சிராவண மாதம் சுக்ல த்வாதசி, கேட்டை நக்ஷத்திரம் என்றும் சொல்லப்படுகிறது).

7. ஸௌராஷ்டிரம், விகாரி வருஷம், நவமி திதி - ரோகிணி நக்ஷத்திரம், மகரம்/கும்பம் ராசி, சனிக்கிழமை, எள், நீல நிறம். (ப்ரமோதூத வருடம் புஷ்ய மாதம், கிருஷ்ண அஷ்டமி, ஸ்வாதி நக்ஷத்திரம் என்றும் சொல்லப்படுகிறது).

8. பர்பர தேசம், பைடீனஸ கோத்ரம் ராக்ஷஸ வருடம், பாத்ரபத மாதம், கிருஷ்ண சதுர்த்தசி, ஹஸ்த நக்ஷத்திரம், ஞாயிறு, சிம்ம ராசி. உளுந்து, நீல நிறம்.

9. அந்தர்வேதி தேசம், ஜைமினி கோத்ரம், அபிஜித் நக்ஷத்ரம், கொள்ளு - பல நிறங்கள். ராக்ஷஸ வருடம், சித்திரை மாதம், கிருஷ்ண சதுர்த்தசி ரேவதி நக்ஷத்திரம், திங்கட்கிழமை, கடக ராசி.

10. எருக்கு, பலாசம், கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அருகம்புல், தர்ப்பை.



# ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதர் சரித்திரம் -2

சென்ற இதழ் தொடர்ச்சி ....

நாரதரை போல், ஊர் ஊராக இப்படி சென்றால், இவரது வாழ்க்கை என்னவாகுமோ என்று அஞ்சிய இவரது உறவினர்கள், நற்குலத்தில் ஒரு பெண்ணை இவருக்கு மணமுடித்து, இல்லறத்தில் ஈடுபட செய்தனர்.

இதுவும் பகவத் சங்கல்பமே என்று கருதி, பாகவதர் குடும்பியானார். குருமுகமாக பல தேவதா மந்திரங்களை உபதேசிக்க பெற்று, லக்ஷக்கணக்கான ஜபம் செய்து மந்திர சித்தி பெற்றார். அதனால் துர்தேவதைகள், பேய், நோய் என்று பலவிதமாக துன்பப்படும் பலருக்கு, மந்திரித்த விபூதியை அளித்து, அவர்களுக்கு கஷ்ட நிவ்ருத்தியை செய்வார். மற்ற மதத்தினர் கூட, இவரிடம் வந்து பணிந்து பிணி நீங்கி செல்வர்.



விவாஹம் ஆனதும், குடும்பத்தை காக்க வேண்டிய கடமை வந்து விட்டது. பகவத் ஸ்மரணையிலேயே முழுகிய பாகவதரை, சம்சார சிந்தனையிலும் புக வைத்தார் இறைவன். ஜீவனோபாயத்திற்காக மீண்டும் புதுக்கோட்டையையே நாடி சென்றார். 'வித்வான் ஸர்வத்ர பூஜயதே' எனும்படி கற்றவர்க்கு செல்லுமிடம் எல்லாம் மதிப்புதான். அதனால், அரசினர் கல்லூரியில் சிறுவர்க்கு சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியராக இவருக்கு உத்யோகம் ஏற்பாடாயிற்று.

ஊரார் நித்ய பஜனைக்கும் ஆதரவளித்தனர். புதுக்கோட்டை

மாணவர்கள் மட்டுமல்லாமல், உலகிற்கே சங்கீதமும் பக்தியும் கற்பிக்க, பகவான் இவரை ஊர் ஊராக அனுப்பினான்.

இப்படியாக ஜீவனம் செய்து கொண்டிருந்த போதிலும், ஆத்மார்த்தமாக பஜனையில் ஈடுபட்ட இவருக்கு, புரந்தரதாசர், த்யாகராஜரை போல் சதா பரமனையே பாடிச் சென்று, உத்தமமான உஞ்சவ்ருத்தி எடுத்து, அதில் பகவானுக்கு திருவாராதனம் செய்து, பின் ப்ரசாதத்தை உட்கொள்ள வேண்டும் என்ற தீவிரமான தாபம் உண்டாயிற்று.

இவரது இந்த தாபத்திற்கு பதில் கூறுவது போல், 'அஞ்சாதே! விரைவில் இஷ்டம் பூர்த்தியாகும்' என்று பாகவத சம்பிரதாய ப்ரவர்த்தகரான ஸ்ரீபோதேந்திரரின் அபய வசனம் இவர் காதில் விழுந்தது. இதை கேட்டதும், பாகவதருக்கு மன சாந்தி ஏற்பட்டது. மறுநாளே நாம சூத்ரம், உஞ்சவ்ருத்தி பாத்ரம், தலையில் நாம வஸ்திரத்தால் பரிவட்டம், தம்புரா, ஜால்ரா போன்ற பூஷணங்களுடன், உஞ்சவ்ருத்தி கோலத்தில் அழகாக சோபித்தார் பாகவதர். அன்று முதல், ஜீவித பர்யந்தம் அவர் உஞ்சவ்ருத்தி எடுத்து, அதை பகவானுக்கு சமர்ப்பித்து விட்டு, பின்னர் அதையே உண்பார்.

ஒருமுறை ஒரு பக்தர், "பண்டரீபுரம் செல்லலாம், விட்டலன் மிகவும் சந்தோஷப்படுவான்" என்று விண்ணப்பித்தார். தனது பஜனை, உஞ்சவ்ருத்தி இவைகளுக்கு பங்கமில்லாமலிருந்தால் போவோம் என, இவரும் சம்மதித்தார். பண்டரிபுர யாத்திரை மேற்கொண்டார். திரும்பும் வழியில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி ஸ்வப்னத்தில் தரிசனம் தர, மந்திராலயமும் சென்றார்.

பின் சில பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களுக்கு சென்றார். எங்கு சென்றாலும், லக்ஷ்மி ந்ருஸிம்ம ஜயந்திக்கு முன்னதாகவே திரும்பி விடுவார். பெரிய தனிகர்கள், மிராசுதார் போன்றோரும் வியக்கும்படி உத்ஸவம் நடத்துவார். அன்னதானம் அபரிமிதமாக நடக்கும்.

ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ம விக்ரஹம் அவருக்கு கிடைத்த விதமே மிகவும் ஆச்சர்யமானது. ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்மருக்கு

உத்ஸவம் நடத்திய போதிலும், ஒரு ந்ருஸிம்ம விக்ரஹம் தன்னிடமில்லையே என்ற வருத்தம், பாகவதருக்கு இருந்தது. பகவான் பக்த பாரிஜாதன் அல்லவா? சாந்தநாதர் கோயிலருகே இருந்த குளத்தில் தூர்வாரி, புதிதாக ஜலம் விடப்பட்டது. அப்போது, அருகில் விளையாடி கொண்டிருந்த சிறுவர்கள் விளையாட்டாக குளத்தில் இறங்கினர். அதில் ஒரு சிறுவனின் காலில் ஏதோ இடித்தது. என்ன இது? என்று குனிந்து அதை எடுத்து பார்த்தால், என்ன ஆச்சரியம்!

ஒரு ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ம விக்ரஹம் கிடைத்தது. குற்றமில்லா அச்சிறுவனின் மனதிலே, பாகவதரிடம்தான் இதை தர வேண்டுமென்று தோன்றியதுதான் தெய்வ செயல்.

தியாகராஜர் காவேரியில் கிடைத்த ராம விக்ரஹத்தை கண்டு, பரவசமாக பாடியது போல், பாகவதரும் பரமானந்தமடைந்தார். இது முதல் 'அபிநவ த்யாகராஜர்' என்று அழைக்கப்படலானார்.

(தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

## சனாதனப்புதிர் பகுதி 81 - <u>கேள்விகள்</u>- ஆத்ரேயன்

கீழ்க்கண்ட கிரஹங்கள் - எந்த தேசத்திற்கு அதிபதி, மற்றும் அவற்றின் கோத்ரம், பிறந்த திதி, நக்ஷத்ரம், ராசி, கிழமை, தானியம், நிறம் இவைகள் என்ன?

1. சூரியன்?
2. சந்திரன்?
3. அங்காரகன் (செவ்வாய்)?
4. புதன்?
5. வியாழன்?
6. சுக்ரன்?
7. சனைச்சரன்?
8. ராகு - இவரது தேசம், கோத்ரம், நிறம் இவைகள் என்ன?
9. கேது - இவரது தேசம், கோத்ரம், நிறம் இவைகள் என்ன?
10. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்ரன், சனி, ராகு, கேது இவர்களுக்கு உகந்த சமித்து என்ன?

**love is eternal.....we build homes with love**

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruuram Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் -23

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீஞானேஸ்வரர்-12 (பிரதிஷ்டானபுரம்)

பாரத தேசத்தில் சாஸ்திரத்திலும், வேதத்திலும், புராணத்திலும், இதிஹாஸத்திலும் கரைகண்டவர்கள் பலர் அக்காலத்தில் இருந்தனர். அப்படி அவர்கள் வாழ்ந்த இடங்கள் ஒவ்வொரு ராஜ்யத்திலும் இருந்தது. காசி என்பது பல பண்டிதர்கள் வாழ்ந்த இடம். இன்றும் கூட அப்படி இருக்கிறது. காசியில்தான் முன்னர் சர்வகலாசாலை இருந்தது. இங்கு சகல கலைகளும், வேதம், சாஸ்திரம், இதிஹாஸம், புராணம் எல்லாம் கற்பிக்கப்பட்டு வந்தது. காசியில் வாழ்ந்த ஒரு பண்டிதருக்கே கூட, அக்காலத்தில் நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும், பதினெட்டு புராணங்களும் தெரிந்து இருக்கும். அந்த காலத்தில் பண்டிதர்கள் அப்படி இருந்தார்கள். காசி என்றில்லை; தமிழ்நாட்டில் கூட கும்பகோணம் அருகில் உள்ள திருவிசநல்லூர், ராஜமன்னார்குடி எனப்படும் மன்னார்குடி போன்ற இடங்களில், வீட்டுக்கு வீடு பண்டிதர்கள் வாழ்ந்து வந்ததாக சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட பண்டிதர்கள் நிறைந்த சபையானது மிகவும் மதிக்கப்பட்டது. அதனால்தான், தில்லைவாழ் தீக்ஷிதர்கள் முன்னர் அரங்கேற்றம் செய்வது என்னும் வழக்கம் இருந்தது. அப்படி இந்த பைடக் என்கிற பிரதிஷ்டானபுரம் இருந்தது.

ஸ்ரீரங்கத்தில் கம்பர் அரங்கேற்றிய கம்பராமாயண மண்டபம் இன்றும் இருக்கிறது. இங்கு இருக்கும் நரஸிம்மருக்கு 'மேட்டு அழகிய சிங்கர்' என்று பெயர். வால்மீகி தனது ராமாயணத்தில் நரஸிம்ம அவதாரம் பற்றி பாடவில்லை. கம்பர் ராமாயணத்தை இந்த மண்டபத்தில் அரங்கேற்றியபொழுது, அங்கு இருந்த நரஸிம்மர் தலையை ஆட்டி ஆட்டி ஆமோதித்தார். அதனால், அவருக்கு அழகிய சிங்கர் என்று பெயர். அதனால், கம்பரும் தனது ராமாயணத்தில் நரஸிம்மாவதாரத்தை சேர்த்து பாடினார். கம்பர் எப்படி வித்வான்கள் முன்னர் தனது ராமாயணத்தை பாடி, அங்கீகாரம்

பெற்றாரோ, அப்படித்தான் எந்த ஒரு காரியத்தையும் வித்வான்களின் சம்மதத்துடன் செய்யும் வழக்கம், அக்காலத்தில் இருந்தது. ஸ்வயமாக, யாரும் எந்த ஒரு புது முயற்சியிலும் இறங்க மாட்டார்கள். பண்டிதர்கள் அக்காலத்தில் மிக்க படித்தவர்களாக இருந்ததால், நல்ல முடிவை சொல்லும் வன்மை படைத்தவர்களாக இருந்தார்கள்.

சாஸ்திரமோ, ப்ரும்மச்சரிய, கிருஹஸ்த, வானப்ரஸ்த, சன்யாச ஆஸ்ரமங்களில் ஒருவன் மேல் நோக்கி செல்லலாமே தவிர, கீழ் நோக்கி செல்லக்கூடாது என்கிறது. இதன்படி சன்யாசி கிருஹஸ்தர் ஆக கூடாது. ஆனால், விட்டல்பந்த் அதை செய்தவர் ஆகிறார். அதனால், அவரும் அவர் குடும்பமும் ஒதுக்கி வைக்கப்பட்டது. அவருக்கு ஒரு விடிவு வேண்டுமானால், அவர் அதை சாஸ்திரத்தில்தான் தேட வேண்டும். அதை அறிந்த பண்டிதர்களால்தான், அதை சொல்ல முடியும். விட்டல்பந்தும் அப்பேர்ப்பட்ட சாஸ்திரத்திலிருந்து முடிவு தேட விரும்பினார்.

விட்டல்பந்தின் குழந்தைகளுக்கு யாரும் கல்வி கற்பிக்க முன் வரவில்லை. வேதமான கல்வி கற்க வேண்டுமெனில், பூணூல் அவசியம். நந்நூல்களை கற்க பூணூல் தேவை. வேதமான நந்நூலை கற்க, பூணூலை போட்டுவிட ஒருவரும் முன்வரவில்லை. சன்யாசி பெத்த பிள்ளைக்கு எப்படி போடுவது? என்றுதான் எல்லோரும் கேள்வி கேட்டார்கள். ஏனெனில், சாஸ்திரம் அதை விதிக்கவில்லை. இது மட்டுமல்லாமல், விட்டல்பந்தின் குழந்தைகளை எந்த வீட்டிலும் சேர்க்கவில்லை. யாரும் அன்னமும் தரவில்லை. ‘உங்களுக்கெல்லாம் பூணூல் ஒரு கேடா’ என்று ஒவ்வொரு வீட்டிலும் தள்ளி விடுவார்கள். சிலர் அடித்து துரத்துவார்கள். அன்னம் கூட தர மாட்டார்கள். உபகாரம் செய்ய ஒருவருக்கும் எண்ணமில்லை. எல்லோருக்கும் வயதாகி கொண்டே வருகிறது. திரியம்பகம் சென்றால் பதில் கிடைக்கும் என்று பார்த்தால், அங்கு சென்றும் விடிவு கிடைக்கவில்லை. தனக்குப்பின் குழந்தைகள் பாடு மிகவும் கடினம் என்பதை உணர்ந்த விட்டல்பந்த், சாஸ்திரம் படித்த வித்வான்களின் முடிவை கேட்பது; அவர்கள் சொல்வதை ஏற்பது என்று முடிவு செய்தார்.

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

**10**

- ஜனனி

ரத யாத்திரைக்கு அத்வைதர், நிதாயி போன்ற பல கௌடீய பக்தர்கள் குடும்பத்துடன் வந்தார்கள். ஸனாதனரை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தார் ப்ரபு. அவர்கள் பரஸ்பரம் சரண வந்தனம் செய்து கொண்டனர். மழை காலமான நான்கு மாதங்கள் கழிந்த பின், கௌடீய பக்தர்கள் ஊர் திரும்பினர். ஸனாதனர் அதன் பின்பும், அங்கேயே தங்கியிருந்தார். அடுத்த வருடம், அவர் ப்ரபுவின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு, ப்ருந்தாவனம் சென்றார். போகும் வழியில், ப்ரபு சென்று லீலைகள் புரிந்த அனேக இடங்களை தரிசித்து கொண்டே, ப்ரபுவின் லீலைகளை ஸ்மரித்துக் கொண்டே சென்றார். சிறிது காலம் கழித்து ரூபரும் ப்ருந்தாவனம் வந்தடைந்தார். ஸனாதனர் ப்ருந்தாவனத்தின் மரங்களின் அடியிலேயே வஸித்தார். இவ்வாறு இரு ஸகோதரர்களும் ப்ருந்தாவனத்தில் இருந்து கொண்டு க்ருஷ்ண கீர்த்தனம் செய்து கொண்டே, தங்கள் காலத்தை கழித்தனர்.

இன்றும் ப்ருந்தாவனத்தில் நாம் மதன்மோஹனின் ஆலயத்தை தரிசிக்கிறோம். இந்த மதன்மோஹன், ஸனாதனரிடம் வந்த கதை மிகவும் ஸ்வாரஸ்யமானது. மதுராவில், மதுகரி பிக்ஷை பெற ஸனாதனர் ஒரு க்ருஹத்திற்கு செல்வார். அவ்வீட்டுப் பெண்மணி பகவான் ஸ்ரீமதனமோஹனனை உபாஸித்து வந்தாள். அவர்கள் இல்லத்தில், மதன்மோஹன் ஒரு குழந்தை போல் விளையாடுவான். இந்த மதனமோஹனின் அழகு ஸனாதனரின் மனதை கொள்ளை கொண்டது. உண்மையில் இவனை காணவே, பிக்ஷை என்ற வ்யாஜத்தில், இங்கு ஸனாதனர் வருவார். அவ்வீட்டுப் பெண்மணிக்கு ஒரு சிறு பிள்ளை இருந்தான். இவனுக்கும் மதனமோஹனனுக்கும் நல்ல நட்பு. இருவரும், ஒரே தட்டிலிருந்தே உணவு உட்கொள்வார்கள். இதை கண்டு, ஸனாதனர் வியப்பில்

ஆழ்வார். ஒருநாள் மதுகரிக்கு சென்ற ஸனாதனர், ஆக்ரஹத்துடன் அப்பெண்மணியிடம், "தாயே! எனக்கு பிக்ஷை அளிக்க விரும்பினால், இந்த சிறுவனின் உச்சிஷ்டத்தை எனக்கு தா!" என்றார். அவளும், அவ்வாறே மதனமோஹனின் உச்சிஷ்ட ப்ரஸாதத்தை, ஸனாதனருக்கு அளித்தாள். இதுமுதல் தினமும் உச்சிஷ்டான்னத்தை பெறுவதற்காகவே ஸனாதனர் அங்கு செல்லலானார்.

ஒருநாள் மதனமோஹன் ஸனாதனரின் கனவில் தோன்றி, "இந்த நகரத்தின் நெரிசலை என்னால் தாங்க முடியவில்லை. தயவு செய்து அப்பெண்மணியிடமிருந்து என்னை அழைத்து வந்துவிடுங்கள். நான் காட்டில் வாசம் செய்ய விரும்புகிறேன்" என்றான். அன்றிரவே அப்பெண்மணியின் கனவிலும் தோன்றி, "என்னை ஸனாதன பாபாவிடம் கொடுத்து விடு" என்றும் கூறினான். மறுநாள் ஸனாதனர் சென்று, "தாயே! மதனமோஹன் வனத்தில் வஸிக்க விரும்புகிறான். நீ என்ன நினைக்கிறாய்?" என்றார்.

ரோஷமும் ப்ரேமையும் கலந்த த்வனியில் அப்பெண்மணி கூறினாள், "பாபா! இப்பிள்ளையின் போக்கிரித்தனத்தை நான் முன்பே அறிவேன். ஒரே இடத்தில் இவனுக்கு இருக்கவே தெரியாது. எந்த யசோதை அவனை வாஞ்சையுடன் வளர்த்தாளோ, அவளையே ஒரு உலக்கையை விட்டுவிட்டு செல்வது போல் சென்றவன் அல்லவா இவன்! 'எனக்கு இங்கு மனமில்லை' என்று மீண்டும் மீண்டும் கூறுகிறான். அவனுக்கு என்னிடம் மனமில்லை என்றால், எனக்கு மட்டும் அவனிடம் என்ன வேண்டியிருக்கிறது? நீங்களே இவனை எடுத்துச் செல்லுங்கள்" என்று கண்களில் கண்ணீர் மல்க கூறி, ஸனாதனரிடம் அவனை ஒப்படைத்தாள். வெளியில் இவ்வாறெல்லாம் பேசினாலும், உள்ளே அவள் மனது விரஹத்தால் துடித்தது.

மதனமோஹனனுடன், ஸனாதனர் யமுனா தீரத்திற்கு வந்தார். மதன்மோஹனிற்காக ஸூரியகாட் அருகில், ஒரு சிறு குடிசையை அமைத்து, அங்கே அவனை வைத்து பூஜிக்கலானார்.

**(தொடரும்)**

# *பாலகர்களுக்கு ஒரு கதை*



## *கடவுள் தந்து பெற்றது!*

பாலர் பூங்கா ஒன்றில், ஒரு மூதாட்டி அமர்ந்திருந்தாள். பனிக்காலத்தில் ஒரு இளம் காலை நேரமது. அங்கு பூத்திருந்த மலர்களில் தட்டான், பட்டாம்பூச்சிகள் பறந்த வண்ணம் இருந்தன. மரங்களில் பறவைகள் அமர்ந்து சப்தம் போட்டு கொண்டிருந்தன. அந்த அமைதியான அழகான சூழலில், அந்த அன்னை அமர்ந்து, அந்த இயற்கையை ரசித்து கொண்டிருந்தாள். அவள் முகம், தான் கண்டு கொண்டிருக்கும் காட்சியினால் மலர்ந்து இருந்தது. அவள் ரசித்தபடி இருந்ததால், நேரம் போனதே தெரியாமல் காலை சிற்றுண்டிக்கான சமயம் கடந்து, அவளுக்கு பசித்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. கதிரவனும் மெல்ல விண்ணில் எட்டி வர இருந்தான். நேரம் ஆக ஆக, கதிரவன் சூடும் இணைந்து கொள்ள, அவள் பசியினால் வயிறை பிசைந்து கொள்ளும்படி ஆகிவிடும்போல் இருந்தது.

அப்பொழுது ஒரு சிறுவன் அங்கு வந்தான். அவனிடம் ஒரு தோள் பை இருந்தது. அதிலிருந்து, சிறு சிறு பொட்டலங்களை பிரித்தான். அது சிற்றுண்டிதான். அந்த சிறுவன், அவற்றில் ஒன்றிரண்டை எடுத்து, தனது சிறு கரங்களால் ஏந்தி, அந்த அன்னை அருகே அமர்ந்தவன், "அன்னையே! தங்கள் முகத்தை பார்த்தால், அதிக பசியுடன் இருப்பது தெரிகிறது. இது எனக்கு என் அன்னை அளித்தது. இங்கு நான் விளையாட வந்தேன். இதை உண்டு பசி ஆறுங்கள்" என்று அன்பு ஒழுக சொன்னான். அதை கேட்ட அங்கே உட்கார்ந்திருந்த அவ்வன்னை, அந்த சிறுவனின் அன்பினால் திக்கு முக்காடி போனாள். அவன் பேசிய அந்த பாலன்ன பேச்சில் மயங்கி, அவனது சிறு கண்களில் வெளி வந்து கொண்டிருந்த அன்பொளியை பருகியவாறே, அவன் கொடுத்ததை வாங்கி கொண்டாள். அவள் அவனை பார்த்து கொண்டே ருசி பார்க்காமல் சாப்பிட்டாள். ஆனாலும், அது அவளுக்கு மிக ருசிகரமாய் இருந்தது. அவனே, ஒரு குவளையில் தண்ணீரை ஏந்தி, அவளிடம் குடிக்க நீட்டினான்.

அப்பொழுது அவள் சிந்தனைகளை, அச்சிறுவனின் அன்பு முகம் அடைத்து கொண்டது. உண்ட பின், அவனே கரங்களை கழுவ நீர் வார்த்தான். கை கழுவி துடைத்து கொண்ட அவள், தனது வயதான கரங்களை மெல்ல அவன் பக்கம் நீட்டி அவன் கன்னத்தை தொட்டு தட்டி கொடுத்தாள். வார்த்தை அவளுக்கு வரவில்லை. சிறுவன் அப்படியே சிறிது நேரம் அங்கிருந்து விளையாடி விட்டு, மறுபடி திரும்பி செல்லும் முன், அந்த அன்னைக்கு, தான் கொண்டு வந்திருந்த ஒரு சூடான பானத்தை கொடுத்து, குடிக்க செய்தான். "எனக்கு நேரமாகி விட்டது. என் அன்னை தேடுவாள். கிளம்புகிறேன்" என உத்திரவு பெற்று சென்றான். அவளும் அவனுக்கு பிரியமுடன் விடை கொடுத்தனுப்பினாள்.

மனது நிறைந்திருந்தாலும் அவன் கிளம்பி சென்றவுடன், அந்த மூதாட்டிக்கு, "அடடா! அந்த சிறுவனிடம் முகவரியோ பெயரோ கேட்க மறந்துவிட்டோமே" என தோன்றியது. அவள் கிளம்பி தன் வீட்டிற்கு சென்றாள். வாசலிலேயே அவள் மகன், "அம்மா! வாகனத்தில் ஏற்பட்ட கோளாறினால் கிளம்ப தாமதமாகி விட்டது. சிற்றுண்டிக்கு என்ன செய்தாய்?" என கவலையுடன் கேட்டான். அவளோ வழக்கத்திற்கு மாறாக மிகுந்த புன்னகையுடன், 'கடவுள் கவனித்து கொண்டார்' என்றவாறு சலிப்பேதும் காட்டாமல், நடந்தாள். அவள் மகனுக்கு அது ஆச்சரியமாய் இருந்தது.

அங்கே சிறுவன் ஓட்டமாய் ஓடி தன் அன்னையிடம் தனது பையை கொடுத்தான். அதை பிரித்த அவன் அன்னை, 'ஏதடா! எல்லாவற்றையும் உன் நண்பர்களுக்காக கொடுத்து விட்டாயா' என்றாள். அவன் உடனே, 'அம்மா! கடவுளுக்கு பசித்தது. கொடுத்து விட்டேன்' என்றான். கடவுள் எப்படி இருந்தார் என்று கேட்டாள் அன்னை. மழலை மொழியிலே அவன், 'உன்னை விட அவருக்கு வயது அதிகம்' என்றான். அந்த பதிலில் இருந்த தீர்மானத்தினால், ஆச்சரியமுடன் அவன் அன்னை மூக்கில் விரலை வைத்து கொண்டாள்.

'அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு' என வள்ளுவர் சொல்வது ஞாபகம் வருகிறதல்லவா?

## சத்சங்க செய்திகள்

**நவம்பர்** - பெரியகுளம் தெற்கு அக்ரஹாரம் சிருங்கேரி கல்யாண மண்டபத்தில் நவம்பர் **28**ஆம் தேதி அன்றும், உடுமலைப்பேட்டையில் நவம்பர் **29**ஆம் தேதி **G.V.G.** கலையரங்கத்திலும் நடைபெற்ற மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையிலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு நாம மஹிமை, மஹான்களின் பெருமை குறித்து அருளுரை வழங்கினார்கள். இதில் பெருந்திரளான அன்பர்கள் கலந்து கொண்டு மஹாமந்திர கீர்த்தனம் செய்து, குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர். மேலும் பெரியகுளம் நாமத்வாருக்கும் சிவகாசி நாமத்வாருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்தார்கள். சிவகாசியில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது.

**டிசம்பர் 13** - சென்னை கோவூர் தனலக்ஷ்மி கல்யாண மண்டபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. **800**க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**டிசம்பர் 18-26** - மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் சன்னதியில், அத்யயன உத்ஸவம், கீர்த்தனாவளி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. **26**ஆம் தேதி ஸ்வாமி தெப்போத்ஸவம் கண்டருளினார்.

**டிசம்பர் 20** - சென்னை வீனஸ் காலனியில் நடைபெற்ற வைதிகஸ்ரீ மாத பத்திரிக்கையின் ஆண்டுவிழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

**தெய்வத்தமிழ் இசை விழா** - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பில் **9**ஆம் வருடமாக தெய்வத்தமிழ் இசை விழா சென்னை அசோக்நகர் மஹோதயா ஹாலில் டிசம்பர் **18**முதல் **25**தேதி வரை நடைபெற்றது. கலைசுடர்மணி திரு.பாலச்சந்தர் **&** திரு.பாலமுருகன் குழுவினரின் மங்கல நாதஸ்வர இசையுடன் ஆரம்பித்த விழாவில், வள்ளிமலை வள்ளல் திருப்புகழ் மன்றத்தினரின் திருப்புகழ், திருவாசக செந்நாவலர் திரு.சற்குருநாத ஓதுவாரின் தேவாரம், திருமுறை இசைக்கலாநிதி திரு.பாலச்சந்திர ஓதுவாரின் திருமூலர் திருமந்திரம், செல்வி.ஸ்ரீரஞ்சனிசந்தான கோபாலனின்




கோபாலகிருஷ்ண பாரதி கீர்த்தனங்கள் மற்றும் திருமதி. நிர்மலாராஜசேகரின் வீணை இசையும் இடம் பெற்றிருந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் மிக அருமையான பக்க வாத்ய கலைஞர்களின் இசையுடன் மிக சிறப்பாக நடந்தேறியது. பூர்த்தி நாளன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை, திரு.ப்ரதீப் ஜானகிராமன் சத்சங்க குழுவினர் மிக அருமையாக பாடினர். திரளான இசையன்பர்கள் கலந்து கொண்டு ஆனந்தமுற்றனர்.

**டிசம்பர் 21**ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு சிறப்பு பூஜை செய்து பிரசாதம் வழங்கினார்கள். அன்று இரவு ஏராளமான பக்தர்கள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் அகண்டமாக மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தார்கள்.



**ஆஸ்திரேலிய சத்சங்கங்கள்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் சிட்னியில் நாமத்வாரை திறந்து வைத்த **Dr.**பாக்யநாதன்ஜி மெல்போர்ன் நகரில் தொடர்ந்து ஒரு வாரத்திற்கும் மேலாக பல சத்சங்கங்களில் கலந்து கொண்டார். பின்னர் நவம்பர் **20**ந்தேதியில் இருந்து அடிலெய்ட்டு நகரில் சத்சங்கங்களிலும் பிரிஸ்பேன் நகரில் ஒரு கூட்டுப்ப்ரார்த்தனையிலும் கலந்து கொண்டு விட்டு மறுபடியும் சிட்னியில் 'பாகவத தர்மமே எல்லோருக்கும் ஏற்றதானது' என்ற தலைப்பில், கலியை பலி கொள்ளும் கீர்த்தனையை மையமாக கொண்டு, ஒரு சத்சங்கத்தில் பேசினார். சிட்னியில் முற்றிலும் ஆஸ்திரேலியர்களுக்காக, மஹாமந்திர பிரார்த்தனை நிகழ்ச்சி, சத்சங்கத்தை சேர்ந்த மைத்ரேயி அவர்களால், ஏற்பாடு செய்யப்பட்டு, நன்கு நடைபெற்றது. ஆஸ்திரேலியா ராமகிருஷ்ணா கோவிலில் முன்னரே பிரதிஷ்டை ஆகி, கொலு வீற்றிருக்கும், ஸ்ரீ ப்ரேமிகவரதன் சன்னதியிலும்



கருணாமயி அவர்களின் சுந்தரம் ஆஸ்ரமத்திலும் கேன்பெராவில் அன்பர் இல்லத்திலும் சத்சங்கத்தை நிகழ்த்தினார். பின்னர் பிஜித்தீவுகளுக்கு புறப்பட்டு சென்று அங்கு நகாஷி, சுவா ஆகிய இடங்களில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையுடன் கூடிய பல சத்சங்கங்களில் கலந்து கொண்டார். குறிப்பாக ஒரு மஹாமந்திர கீர்த்தன சத்சங்கம் **Nasinu Correctional center, Prison facility at Suva, Fiji**யில் அனைவரும் பங்கேற்க இடம் பெற்றது குறிப்பிட வேண்டிய ஒன்று.



தொடர்ந்து நியூசிலாந்து சென்று அங்கு ஆக்லாந்து மற்றும் வெல்லிங்டனில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மஹாமந்திர கீர்த்தனையை மையமாக வைத்து சத்சங்கங்களில் பேசினார். இந்த சத்சங்க நிகழ்ச்சிகள் அனைத்திலும் பாகவத தர்மம், கலியையும் பலி கொள்ளும், 'மதுரஸ்மரணம் - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திவ்ய சரித்திரம்', மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை, வீடுகளில் சத்சங்கங்கள், கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுர கீத பஜனை சத்சங்கங்கள் அகியன தவறாமல் இடம் பெற்றிருந்தது.

ஆஸ்திரேலிய, நியூசிலாந்து, பிஜித்தீவு அன்பர்கள் இந்த சத்சங்கங்கள் அனைத்தையும் மிக அழகாக ஏற்பாடு செய்திருந்தனர். ஒவ்வொரு இடத்திலும் அன்பர்களின் அயராத பணியையும் ஈடுபாட்டையும் முழுமையாக பார்க்க முடிந்தது.

**அமெரிக்கா சத்சங்கங்கள் -** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் ராமானுஜம்ஜி தொடர்ந்து அமெரிக்காவில் டல்லஸ், சியாட்டில், கலிபோர்னியா ஆகிய இடங்களில் சத்சங்கங்களை நிகழ்த்தி விட்டு சென்னை திரும்பினார். க்ருஷ்ணானுபவம் எனும் அருமையான நிகழ்ச்சி ஒன்று அமெரிக்க அன்பர்களால் ஒருங்கிணைத்து நடத்த





பெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனைகள் நாட்டியத்துடன் இடம் பெற்றிருந்தது.



ஏராளமானோர் இதில் கலந்து கொண்டு, ஆனந்தித்தனர். கலிபோர்னியாவில் ராமானுஜம்ஜி Harmony In Communication எனும் தலைப்பில் ஒரு பயிற்சி முகாமை Lawrence Berkeley Labsஇல் நடத்தினார். இது பலருக்கு மிகவும் உபயோகமாக அமைந்தது.

**நவம்பர் - டிசம்பர்** - மதுரை, உசிலம்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, அருப்புக் கோட்டை, கோவில்பட்டி,




திருச்செந்தூர், கடம்பூர், விருதுநகர், சிவகாசி, தாயில்-பட்டி, அம்பை, கடயநல்லூர், கடயம், புளியங்குடி ஆகிய இடங்களில் 65பள்ளிகளில் சுமார் 26000 மாணாக்கர்கள் முன்பு, நவம்பர் 25 முதல் டிசம்பர் 23 வரை, முரளிஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார்.



# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

*ஸ்ரீமதனமோஹன்தாஸ் பாபாஜி-2*

பண்டித் பாபாவை தவிர, வேறு ஒருவரோடும் ஸங்கம் வைத்துக் கொள்ளமாட்டார். ஒரு கமண்டலுவும் கழியையும் தவிர, தன்னிடம் வேறு ஒரு பொருள் வைத்துக் கொள்ளமாட்டார். அவர் கண்கள் எப்போதும் பனித்திருக்கும். உள்ளே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அலௌகீகமான அனுபவத்தினால், அவரது முகாரவிந்தம் ஜொலிக்கும். இவ்வாறு 14 வருடங்கள் ப்ருந்தாவனத்தில் பஜனை செய்துவிட்டு, பின் பாபா சத்ரவனம் சென்றுவிட்டார். தன்னுடைய 96வது வயதில், இவர் பரமபதமடைந்தார்.

## பக்திமதி கோபீமா

பக்திமதி கோபீமா அயோத்தியில் பிறந்தவள். லாஹூரிலுள்ள பாடீத்வார் மகளிர் பாடசாலையில், அவர் தையற்கல்வி பயில்விக்கும் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தாள். மிகவும் எளிமையான மற்றும் நேர்மையான வாழ்க்கையை நடத்தி வந்தார். தனது வருமானத்தில் ஒரு சிறிய தொகையை மட்டும் தனது ஜீவனத்திற்கு எடுத்துக்கொண்டு, மீதியை ஏழை எளியோரின் ஸேவையிலேயே கோபீமா செலவிடுவார். வேலை நேரம் தவிர மற்ற நேரம் முழுவதையும், பஜனையிலேயே செலவிடுவார்.

சில வருடங்களில், வேலையிலிருந்து தானாகவே ஓய்வு பெற்று அயோத்தி சென்றுவிட்டார் கோபீமா. இவர் ராமரிடம் மிகுந்த பக்தி பூண்டிருந்தார். ஆதலால், தனது நேரம் முழுவதையும், பகவான் ஸ்ரீராமருடைய ஸேவையிலும் பஜனையிலுமே செலவிடுவார். இப்படியாக இருக்கும்பொழுது, திடீரென்று ஜார-சோர-சிகாமணியான நமது கண்ணன், எப்படியோ கோபீமாவின் இதயத்தை திருடிவிட்டான்.

அவரது காதுகள் கண்ணனுடைய தேனினும் இனிய தீங்குழல் ஓசையை கேட்க துடித்தன. கண்களோ அவனது

திவ்ய லாவண்யத்தை காண தவித்தன. இதனால் அவரால் அயோத்தியில் இருக்க இயலவில்லை. ராமரின் சரணத்தை வணங்கி, மன்னிப்பு கோரிவிட்டு, கோபீமா ப்ருந்தாவனம் வந்துவிட்டார்.

ப்ருந்தாவனத்தில், கோபீநாத் பஜாரில் மாதம் எட்டணாவிற்கு ஒரு வாடகை அறை எடுத்துக்கொண்டு, அங்கிருந்தபடியே ஷ்யாமஸுந்தரனை பஜித்தார் கோபீமா. அச்சமயம், ஒரு முறை கோபீமாவிற்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. பல நாட்கள் அவதிப்பட்ட பின்பும், வைத்தியத்திற்கு பலனளிக்காமல், காய்ச்சல் தொடர்ந்து அவரை வாட்டியது. இதன் காரணமாக, மிகவும் பலவீனமாக ஆகிவிட்டார் கோபீமா. தானாக எழுவதோ, அமர்வதோ கூட அவருக்கு முடியாமல் போய்விட்டது. அவருக்கு உதவி புரியவும் அங்கு யாருமில்லை. இவ்வுலகில், அனாதைகளுக்கு எல்லாம் நாதனானவன் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் ஒருவனே அன்றோ! அவனிடம் புலம்பினாள் கோபீமா, "நான் என் குடும்பத்தையும், வீட்டையும், அயோத்தி போன்ற உன்னதமான ஜன்ம பூமியையும், ஏன் எனது இஷ்ட தெய்வமான ஸ்ரீராமரின் சரணத்தை கூட விட்டுவிட்டு, நீயே அடைக்கலம் என்றெண்ணி இங்கு வந்தேன். அங்கேயே இருந்திருந்தால், என் குடும்பத்தார் என்னை கவனித்துக் கொண்டிருப்பார்கள். உன்னையே நம்பி வந்த என் மேல் ஒரு கடாக்ஷம் கூட நீ செய்யவில்லை. திரும்பி ஒரு பார்வை கூட பார்க்க மாட்டேன் என்கிறாய்!" இவ்வாறு புலம்பிக் கொண்டே தூங்கிவிட்டாள் கோபீமா.

அவள் கனவில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் காட்சியளித்தான். தனது கையாலேயே, கோபீமாவிற்கு பால் மற்றும் பாலாடை ஊட்டினான். திடீரென்று கனவு கலைந்து, கண் விழித்தாள் கோபீமா. பாலாடையின் சிறு பகுதி, தன் வாயில் இருப்பதை கண்டு வியப்படைந்தாள். அருகிலேயே ஒரு தயிர்ப்பானையும் இருப்பதைக் கண்டு, மிகுந்த ஆச்சரியமடைந்தாள்.

இச்சம்பவத்திற்குப் பின் சிறிது காலம் ஜீவித்து பின் பரந்தாமத்தையடைந்தார் பக்திமதி கோபீமா.

(தொடரும்)

# மாலே மணிவண்ணா - 144




—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

வரைகெழு செல்வனாகிய ஆதிசேடனது திருக்கோயிலை மேலும் காண்கிறார். உடம்பில் கோடுகள் பொருந்திய செல்வன் என்பது, ஆதிசேடனது திருமேனியை சுட்டியது. இனி மலை போல பொருந்திய திருமேனி உடைய செல்வனது நகர் எனலும் ஆம்.

*வண்டொடு தும்பியும் வண்தொடை யாழ் ஆர்ப்ப*
*விண்ட கடகரி மேகமொடு அதிரத்*
*தண்டா அருவியோடு இருமுழவு ஆர்ப்ப*
*அரியுண்ட கண்ணாரோடு ஆடவர் கூடிப்*
*புரிவுண்ட பாடலோடு ஆடலும் தோன்றச்*
*சூடும் நறவோடு காமமுகிழ் விரியச்*
*சூடா நறவொடு காமம் விரும்ப*
*இனைய பிறவும் இவை போல்வனவும்*
*அனையவை எல்லாம் இயையும் புனையிழைப்*
*பூமுடி நாகர் நகர்*

என்பது வரையுள்ள பகுதி திருக்கோயிலின் சிறப்பை மேலும் விளக்க வருகிறது.

அணிகளால் அலங்கரிக்கப்பெற்ற பொலிவு பெற்ற பூமுடியை உடைய நாகராகிய ஆதிசேடன் திருக்கோயில் என்று கூறுகிறார். 'புனையிழை பூமுடி நாகர் நகர்' நலங்களை மேல் கூறுகிறார்.

அப்பூமுடி நாகர் திருக்கோயிலில், வண்டும் தும்பியும் யாழைப்போல இசை பாடும். வண்டினுள் ஒரு சாதி, தும்பி எனப்படும். வண்தொடை - வளமான நரம்புக்கட்டினை உடைய யாழ் என்றார். யாழிசை போல அத்திருக்கோயில் வளாகத்தில், வண்டும் தும்பியும் முரல்கின்றனவாம்.

மதயானை மேகத்தை போல முழங்கும், விண்ட

என்பது வெளிப்பட்ட, கடம்-மதசலம் ஆகும். மதநீர் சொரிகின்ற யானை, மேகத்தின் இடியொலியோடு சேர்ந்து அதிர்கிறது. தடைபடாத நீர்ப்பெருக்கினை உடைய அருவியின் இசையும், பெரிய முழவெனும் மத்தளத்தின் ஒலியும் சேர்ந்து ஒலிக்கும். மகளிரும் மைந்தரும் கூடி செய்யும் ஆடலும் பாடலும் தோன்றும். அரியுண்ட கண்ணார் என்றது மகளிரை - கண்ணில் வெள்ளை விழியில் செவ்வரி, கருவரி கிடக்கும் கண்ணினை உடையவர் என்றவாறாம். மகளிரோடு ஆடவர் கூடி, பாடலும் ஆடலும் நிகழ்த்துகின்றனர். ஆடவர் பாட, மகளிர் ஆடுகின்றனர் எனக்கொள்க. புரிவுண்ட பாடல் என்றது, வாத்திய இசையோடு, வாயிசையும் முறுக்கிய பாடலாகும்.

சூடும் நறவோடு காமமுகிழ் விரிய அவர்கள் சூடி இருக்கின், நறவம்பூவோடு காமம் அரும்புதலை செய்ய, சூடா நறவு ஆகிய காம பாணத்தை அருந்தி காமம் அனுபவிக்கின்றனர்.

சூடா நறவு - வெளிப்படை என்னும் இலக்கணம் - அணியலார் - இவ்வாறு வருபவனவற்றை விபாவனை என்னும் அணி என்பர். நறவு என்பது நறவம் பூவையும், கள்ளையும் குறிக்கும் பொதுச்சொல். சூடா நறவு எனவே நறவம்பூ என்னும் பொருள் விலக்குண்டு, கள் என பொருளாவது காண்க. கள் காமத்தை மிகுத்தலின், நறவொடு காமம் விரும்ப என்று கூறினார்.

போகத்திற் சிறந்தது நாகர் நகர் - நாகநீள் நகரொடும் நாகநாடு தனொடு போகநீள் புகழ் மன்னும் புகார் நகர்' என்கின்ற சிலப்பதிகாரமும் காண்க. (சிலப் - 1-2.22) ஆதிசேடன் திருக்கோயிலை நாகர் நகர் என்றதற்கேற்ப, ஆடவரும் மகளிரும், ஆடலும் பாடலுடன் காம இன்பம் நுகரும் சிறப்பையும் கூறினார்.

வரைகெழு செல்வன் நகர், பூமுடி நாகர் நகராகவும் பொலிகின்றவாற்றை அறிந்து இன்புறலாம்.

(தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஜனவரி 6, 20 பிப்ரவரி 4, 19<br>January 6, 20 February 4, 19 |
| ஜன 3 | யோகிராம்சுரத்குமார் பஜனை சமிதி, சென்னை |
| ஜன 9 | ஹனுமத் ஜெயந்தி |
| ஜன 9-17 | (மாலை) நாரத கானசபா, சென்னை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**